## இலங்கை அச்சீட்டு நிறுவகம் - 2017

---

இலங்கை அச்சீட்டு நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1984 இன் 18 ஆம் இலக்க இலங்கை அச்சீட்டு நிறுவக அதிகாரச்சட்டத்தின் 25(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, இலங்கை அச்சீட்டு நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட 2.1(அ) இலக்கக் குறிப்பின் பிரகாரம், நிறுவகத்தின் கணக்குகள் சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அக் கணக்கீட்டு நியமங்களின் முதலாவது பந்தியின் பகுதி I இன் பிரகாரம், பொருட்களை விநியோகிக்கின்ற அல்லது சேவைகளை வழங்குகின்ற பொதுக் கூட்டுத்தாபனங்கள் இந்நியமங்களை பின்பற்ற தேவையில்லாததுடன் 1.2 ஆம் பந்தியின் பகுதி (அ) இன் பிரகாரம், பொதுக் கணக்களிதன்மையுடனான நிறுவனங்கள் கணக்குகளை தயாரிப்பதில் இக்கணக்கீட்டு நியமங்களை அவ்வாறு பயன்படுத்த வேண்டியதில்லை. எவ்வாறாயினும், இலங்கை அச்சீட்டு நிறுவகம் அவ்விதிகளுடன் இணங்கியிருக்காததுடன் கூறப்பட்ட கணக்கீட்டு நியமங்களை அடிப்படையாகக்கொண்டு நிதிக்கூற்றுக்களை தயாரித்திருக்கவில்லை. அவற்றின் மீதான முன்னைய ஆண்டுக் கணக்காய்வுகள் மூலம் இது சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 18 ஆம் அத்தியாயத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம், நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். ரூபா 4,798,955 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் அவை தற்போதும் பயன்படுத்தப்படுகின்றன. அதற்கிணங்க மதிப்பிடப்பட்ட தவறை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 செப்தெம்பர் 18 இல் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரினால் நிறுவகத்திற்கு உரித்தாக்கப்பட்ட 0.1012 ஹெக்ரயர்கள் (அண்ணளவாக 40 பேர்ச்கள்) காணியின் பெறுமதியானது மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டு தொடர்பான ரூபா 177,880 தொகையான அட்டுறு செலவினங்கள் 2017 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு தொடர்பான ரூபா 228,955 அட்டுறு செலவினங்கள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 1,627,809 பெறுமதியான அட்டுறு செலவினங்கள் தொடர்பான வயதுப் பகுப்பாய்வுகளுடன் விபரமான பட்டியல்கள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ள குறிப்புக்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 11,783,512 தொகையான வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 11,216,274 தொகையான நீதிமன்றக் கட்டணங்களை உள்ளடக்கியிருந்தது. அதில் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 25 கடன்பட்டோர் மீதிகள், 03 மற்றும் 05 ஆண்டுகளிற்கிடைப்பட்ட 504 கடன்பட்டோர் மீதிகள், 01 மற்றும் 02 ஆண்டுகளிற்கிடைப்பட்ட 256 கடன்பட்டோர் மீதிகள் முறையே ரூபா 101,250, ரூபா 3,139,225 மற்றும் ரூபா 2,797,025 கூட்டுமொத்தத் தொகைகளானதுடன் கூறப்பட்ட மீதிகளை அறவிடுவதற்காக முறையான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | |
| (i) VIII ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பந்தி | முகாமைத்துவமானது நிறுவகத்தின் மேலதிகநேர வேலையை ஒதுக்கீடு செய்து மேற்பார்வை செய்வதற்காக முறையான கட்டுப்பாட்டு நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | VIII ஆம் அத்தியாயத்தின் 7.1 மற்றும் 7.2 ஆம் பந்திகள் | மாதாந்தம் மேலதிகமாக உத்தியோகத்தர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட மேலதிகநேரக் கொடுப்பனவு விடயத்தில், அங்கீகரிக்கப்பட்ட மேலதிகநேர வேலை மணித்தியாலங்களின் எண்ணிக்கை, அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் என்பன அவற்றிற்காக பெறப்பட வேண்டிய போதிலும் ரூபா 154,971 மேலதிகநேரப் படியானது அத்தகைய அங்கீகாரம் பெறப்படாமல் இரண்டு உத்தியோகத்தர்களிற்கு 22 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்தன. |
| (iii) | XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பந்தி | உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைகளை குறித்துக்கொள்வதற்காக பொது 190 படிவத்தின் பிரகாரம் விடுமுறைப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | XXIV ஆம் அத்தியாயத்தின் 10.2 ஆம் பந்தி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் காணப்படாத நிறுவகத்தின் தலைவரிற்கும் தற்காலிக அடிப்படையில் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட ஊழியர் ஒருவரிற்கும் மீளாய்வாண்டின் போது இடர் கடன்களாக ரூபா 329,167 தொகை செலுத்தப்பட்டிருந்தன |

(ஆ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்**

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 137 மற்றும் 138 | நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் உறுதிச்சீட்டுக்களின் அங்கீகாரம் அல்லது சான்றுறுதிப்படுத்தலின்றி ரூபா 137,981 கூட்டுமொத்தமான கொடுப்பனவுகள் 09 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட வழங்கப்பட்டு ஆனால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 9,850 கூட்டுமொத்தமான 03 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 454(I) | நிறுவகத்தினால் பயன்படுத்தப்படுகின்ற இருப்புப் பொருட்களின் பதிவறிக்கைகள் உள்ளடங்கலாக பொருளிருப்புப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 751 | இருப்புப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| **(இ)** | **1984 இன் 18 ஆம் இலக்க இலங்கை அச்சீட்டு நிறுவக அதிகாரச்சட்டம்** | |
| (i) | அதிகாரச்சட்டத்தின் 14(i) ஆம் பிரிவு | ஒவ்வொரு மாதத்திலும் ஆகக்குறைந்தது ஒரு தடவை பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டின் போது 09 பணிப்பாளர் சபை கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்ததுடன் அக் கூட்டங்களில் நிறுவகத்தின் நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்காக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | அதிகாரச்சட்டத்தின் 23 மற்றும் 24 ஆம் பிரிவுகள் | (அ) மீளாய்வாண்டின் போது சபையின் அங்கீகாரமின்றி திறைசேரி உண்டியல்கள் மற்றும் குறுங்கால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட முறையே ரூபா 1,603,996 மற்றும் ரூபா 5,598,019 தொகைகள் மீளப்பெறப்பட்டிருந்தன. |
| | | (ஆ) மீளாய்வாண்டின் போது 03 குறுங்கால நிலையான வைப்புக்களில் ரூபா 8,605,090 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் நியதிச் சட்டத்தின் III ஆம் பகுதியின் 23 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் 2012 யூன் 29 ஆம் திகதிய கடிதம் என்பவற்றின் பிரகாரம், அமைச்சரின் பரிந்துரையின் பிரகாரம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட முதலீடுகள் தொடர்பாக விபரமான அறிக்கையொன்று அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 மார்ச் 31 இன் 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மீதான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 7,628,442 மிகையுடன் ஒப்பிடும்போது ரூபா 8,896,260 ஆன மிகையை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 1,267,818 ஆன முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பதவியணியினர் மீதான செலவினங்கள் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 1,619,693 ஆல் அதிகரித்திருந்த போதிலும் கற்கைநெறிகளிலிருந்தான வருமானம் மற்றும் வட்டி வருமானம் என்பன ரூபா 3,276,157 ஆல் அதிகரித்தமையானது மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டின் மிகையில் வீழ்ச்சியொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீளச் சீராக்கிய பின்னர் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை மிகையில் தொடர்ச்சியான முன்னேற்றம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டிற்கான ரூபா 12,488,771 நிறுவக பங்களிப்பு 2014 ஆம் ஆண்டளவில் ரூபா 10,961,081 வரை வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும், தொடர்ந்துவரும் ஆண்டுகளில் இது தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு இது ரூபா 16,607,841 ஆக காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் ரூபா 8,896,260 மிகை காணப்பட்ட போதிலும் நிறுவகத்தின் பிரதான செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட ரூபா 1,696,420 மிகையானது மொத்த மிகையில் 19 சதவீதத்தை மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் 81 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 7,199,840 தொகை முதலீடுகள் மீதான வட்டியிலிருந்து உழைக்கப்பட்டிருந்தது. மேலும், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் பிரதான செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மிகையானது 31 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 756,143 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) ஆண்டின் போது பயிற்சிக்காக ஆட்சேர்ப்புச்செய்யப்பட்ட பயிலுநர்களின் எண்ணிக்கை 182 ஆல் அதிகரித்தமை மற்றும் கற்கைநெறிக் கட்டணங்கள் ரூபா 500 தொடக்கம் ரூபா 1,000 வரையான வீச்சில் அதிகரித்தமை என்பன மீளாய்வாண்டில் ரூபா 1,253,696 ஆல் வருடாந்த கற்கைநெறிக் கட்டணங்களிலிருந்தான வருமானத்தில் அதிகரிப்பை விளைவித்திருந்தது.

(இ) நிறுவகத்துடன் இணைந்த கிளை மாத்திரம் மாத்தளையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரதான செயற்பாடுகளிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 143,057 பற்றாக்குறை காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ஏற்பட்ட பற்றாக்குறையானது 273 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 225,530 ஆக காணப்பட்டது. ஆகையால், இக்கிளையின் செயற்பாடுகளை முன்னேற்றுவதை நோக்கி நிறுவகம் போதியளவு கவனத்தை செலுத்தியிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியை மேவுகை செய்யும் வகையில் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் மீளாய்வாண்டிற்கு பொருத்தமானதாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், புதிய கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல், சர்வதேச தொழில்சார் தகைமைகளுடனும் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான பல்வகை திறன்களுடனும் தொழிலாளர் படையை அபிவிருத்தி செய்தல், புதிய ஒழுங்கமைப்புக் கட்டமைப்பை ஸ்தாபித்தல் மற்றும் அதற்குத் தேவையான மனித வளங்களை பெற்றுக்கொள்ளுதல் போன்ற தொழிற்பாடுகள் கணக்காய்வுத் திகதியான 2018 ஏப்ரல் 11 வரையிலும் ஆற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் அண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், பதினாறு கற்கைநெறிகள் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் டிப்ளோமா, உயர் டிப்ளோமா, மதிப்பிடுதல் மற்றும் முன் அச்சீட்டு செயற்படுத்துநர் (Estimation and Pre-Press Operator) ஆகிய பெயர்களையுடைய மூன்று கற்கைநெறிகள் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் 03 பகுதிகளின் கீழ் 13 கற்கைநெறிகளை நடாத்துவதற்காக 1084 எண்ணிக்கையான பயிலுநர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் முழுமையாக சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களில் 58 சதவீதம் கலை வடிவமைப்பு மற்றும் ஊடகத்திற்கான (Art Design and Media) கற்கைநெறிகளிற்கு மாத்திரமேயாகும்.

(இ) 1984 இன் 18 ஆம் இலக்க இலங்கை அச்சீட்டு நிறுவக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், கற்கைநெறிகளை நடாத்துவது நிறுவகத்தின் பிரதான நடவடிக்கையாகவுள்ளதுடன் அந்நடவடிக்கைகள் மூலமான நிறுவகத்தின் தேறிய பங்களிப்பானது மீளாய்வாண்டில் 19 சதவீதமாக தாழ்ந்த மட்டத்திலிருந்தது. புதிய கற்கைநெறிகளை அறிமுகப்படுத்துதல், புதிய கிளைகளை திறத்தல் மற்றும் கற்கைநெறிகளிலிருந்தான வருமானத்தை அதிகரிப்பதில் ஏற்கனவேயுள்ள கிளைகளிலிருந்தான வருமானத்தை முன்னேற்றுதல் போன்ற செயற்பாடுகளை விரிவாக்குவதற்கான நடைமுறையொன்றை நிறுவகம் அமுல்ப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட 07 கற்கைநெறிகளிலிருந்து மீளாய்வாண்டில் தொண்ணூற்று ஒன்பது பயிலுநர்கள் விலகிச்சென்றிருந்ததுடன் கணனி கிரபிக்ஸ் டிப்ளோமா கற்கைநெறியில் ஆகக்கூடுதலாக 38 பேர் விலகிச்சென்றிருந்தனர். எவ்வாறாயினும், கற்கைநெறிகளை குறைத்தல் மற்றும் விலகல்களை இழிவுபடுத்துதல் தொடர்பான காரணங்களை பரீட்சிப்பது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் ஆகக்குறைந்த மட்டத்தில் இருந்தது.

(உ) பாடசாலையிலிருந்து விலகியோரிற்காக கணனி கிரபிக்ஸ் (Computer Graphics) மற்றும் ஓவ்செற் லிதோகிரபி பிறிண்டிங் (Offset Lithography Printing) எனும் பெயர்களையுடைய 02 கற்கைநெறிகள் தொடர்பாக மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட 16 கற்கைநெறிகளில் தேசிய தொழிலசார் தகைமைக்கான சான்றளிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், தேசிய தொழில்சார் தகைமை மட்டத்தின் சான்றிதழ் கற்கைநெறிகளாக ஏனைய கற்கைநெறிகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான 04 ஆண்டுகளின் போது இலங்கை அச்சீட்டு நிறுவகத்தின் பயிலுநர்களிற்கு வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை 08 மாத்திரமேயாகும். அதனால், தேசிய மட்ட சான்றிதழ்களை வழங்குவதற்காக அவ் இரண்டு கற்கைநெறிகளும் வினைத்திறனாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் அண்டு வரை நடாத்தப்பட்ட 18 வெவ்வேறு கற்கைநெறிகளிற்கான (என்வீகியூ அல்லாத) 1,401 சான்றிதழ்கள் பயிலுநர்களிற்கு வழங்கப்படாமல் கணக்காய்வுத் திகதியான 2018 ஏப்ரல் 11 வரையிலும் நிறுவகத்தில் காணப்பட்டது. அவற்றில் 442 சான்றிதழ்கள் கிரபிக் வடிவமைப்பு கற்கைநெறியை பயின்ற பயிலுநர்களிற்கு தனியாக வழங்கப்பட வேண்டிய சான்றிதழ்களாகும்.

(எ) அச்சீட்டுத் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவத்தில் உயர் டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்தி செய்திருந்த 09 பயிலுநர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 440,000 தொகையான கற்கைநெறிக் கட்டணங்கள் மற்றும் கட்புல தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவத்தில் (Visual Communication and Mangement) உயர் டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்திசெய்திருந்த இரண்டு பயிலுநர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 92,500 கற்கைநெறிக் கட்டணம் என்பவற்றை கற்கைநெறிகளை பூர்த்திசெய்வதற்கு முன்னர் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையான உடன்படிக்கையொன்றோ அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றோ ஏற்படுத்தப்படாமலும் எந்தவொரு கொடுப்பனவும் மேற்கொள்ளப்படாமல் இலங்கை அச்சீட்டுத் திணைக்களத்தின் வளாகத்தில் நிறுவகத்தின் செயற்பாடுகள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அற்றிற்குத் தேவையான நீர் மற்றும் மின்சாரம் என்பன வரையறையொன்றில்லாமல் அரசாங்க அச்சீட்டுத் திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்தது. மேலும், இந்த அச்சீட்டு நிறுவகம் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களிற்கான பயிற்சிகளை எந்தவொரு கட்டணமும் அறவிடாமல் நடாத்தியருந்தது. எவ்வாறாயினும், மேற்படி நிலைமை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தால் உழைக்கப்பட்ட வருமானத்தில் 2017 திசெம்பர் 31 அளவில் நிலையான வைப்புக்களில் ரூபா 78,647,481 தொகை முதலீடுசெய்யப்பட்டிருந்ததுடன் நிறுவகத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதன் மூலம் நோக்கங்களை அடைவதற்காக அந்நிதிகளை பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சான்றிதழ்களை கையேற்று, பொறுப்பாக வைத்திருந்து, வழங்குதல் தொடர்பான கடமைகள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தரொருவரால் எழுத்திலான வேலை ஒதுக்கீடின்றி ஆற்றப்பட்டிருந்ததுடன் நிறுவகம் அச்சிடப்பட்ட சான்றிதழ்கள் அவ்வாறு வழங்கப்பட்ட மற்றும் வழங்கப்படாத சான்றிதழ்கள் தொடர்பாக பதிவேடுகளை பேணியிருக்கவில்லை.

(ஆ) நிறுவகமானது சான்றிதழ்களை அச்சிட்டு, சரியானதன்மையை உறுதிப்படுத்தி கையொப்பமிடுவதற்கு முறையான நடைமுறையொன்றை கொண்டிருக்கவில்லை. இதனால், 04 சந்தர்ப்பங்களின் போது ஒரே பெயரில் இரண்டு சான்றிதழ்கள் ஒவ்வொன்றும் அச்சிடப்பட்டிருந்ததுடன் நிறுவகத்தின் உயர் உத்தியோகத்தரொருவர் இச்சான்றிதழ்களில் அவரது கையொப்பத்தையிட்டிருந்தார்.

(இ) 1,084 எண்ணிக்கையான அச்சிடப்பட்ட வெற்றுச் சான்றிதழ்கள் பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டு நிறுவகத்தின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரால் பேணப்பட்டிருக்கவில்லை.

**4.4 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பிரிவின் பிரகாரம், திறைசேரியின் அங்கீகாரமின்றி உத்தியோகத்தர்களிற்கு எந்தவொரு படியும் செலுத்தப்பட முடியாத போதிலும் நிறுவகத்தால் நடாத்தப்பட்ட இரண்டு ஆண்டு உயர் டிப்ளோமா கற்கைநெறியிலிருந்தான வருமானத்திலிருந்து கௌரவ மற்றும் மிகையூதிய படிகளாக தலைவரிற்கு ரூபா 85,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாதாந்த நிரந்தர சம்பளம் மற்றும் எரிபொருள் படிகள் மீது நிறுவகத்தின் சந்தைப்படுத்தல் உதவியாளராக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச்செய்யப்பட்ட உத்தியோகத்தரொருவரிற்கு பதவிக்குரிய கடமையை நிறைவேற்றும் பொருட்டு பொலன்னறுவையிலுள்ள மாவட்ட இளைஞர் முகாம் ஒன்றில் பங்குபற்றியதற்காக இரண்டு நாட்களிற்கான ரூபா 10,000 இணைந்த படிகள் மற்றும் ரூபா 6,000 அறை வாடகை என்பன செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 13 ஆகவும் உள்ளவாறான பதவியணியினர் 11 ஆகவும் காணப்பட்டதுடன் நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக ஒப்பந்த அடிப்படையில் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் சந்தைப்படுத்தல் உதவியாளர் ஆகிய பதவிகளிற்கு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடங்கிய 02 போதனாசிரியர்கள் (Instructor) பதவிகள் வெற்றிடமாக இருந்ததுடன் 29 வருகை விரிவுரையாளர்கள் மற்றும் 06 போதனாசிரியர்களின் சேவை கற்கைநெறிகளை நடாத்துவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

---

**5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்**

---

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுச் செயலாளரினால் வழங்கப்பட்ட 2017 ஆகஸ்ட் 14 இன் என்பி/எஸ்பி/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் ''2030 நிகழ்ச்சிநிரல்'' என்பவற்றின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவகமும் செயற்பட வேண்டிய போதிலும் இலங்கை அச்சீட்டு நிறுவகம் மீளாய்வாண்டு தொடர்பான இதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுவது என்பதை அறிந்திருக்கவில்லை.

**6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**6.1 உள்ளகக் கணக்காய்வு**

---

2011 திசெம்பர் 23 ஆம் திகதிய டிஎம்ஏ/06 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகத்தில் உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்தப்பட்டிருக்காததுடன் அதன் காரணமாக நிறுவகத்தின் விவகாரங்கள் வினைத்திறனாகவும், ஆக்கபூர்வமாகவும் போதியளவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளுக்கு இணங்கவும் மேற்கொள்ளப்படுகின்றது என உறுதிப்படுத்துவதற்கான நடைமுறையொன்று நிறுவகத்தில் காணப்படவில்லை.

**6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிற்கிடையே 10 சதவீதம் முதல் 453 சதவீதம் வரையான வீச்சில் 40 சந்தர்ப்பங்களின் போது முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் பாதீட்டிலிருந்து பணத்தை ஒதுக்கீடு செய்யாமல் 11 சந்தர்ப்பங்களில் ரூபா 1,233,489 செலவினம் ஏற்பட்டிருந்தமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 6.3 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டில் ரூபா 56,725 தொகையை செலவிட்டு தாபன நடைமுறை மற்றும் நிதி நடைமுறை என்பன தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 வரையிலும் குறிப்பிட்ட அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இது தொடர்பில் எந்தவொரு பின்தொடர் நடவடிக்கையையும் நிறுவகம் எடுத்திருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிறுவகத்தால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பயிலுநர்களிடமிருந்து அறவிடப்பட்ட கற்கைநெறிக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றிற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட சுட்டிகள் உள்ளடங்கிய முறையான கொள்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | வருமான கட்டுப்பாடு | கற்கைநெறிக் கட்டணத்தை திருத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையொன்று தயாரிக்கப்படாமை. |
| (ஆ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | அறவிடமுடியாக் கடன்களிற்கான ஏற்பாடு தொடர்பாக முறையான நடைமுறையொன்று காணப்படாமை மற்றும் கடன் அறவீட்டிற்காக முறையான நடைமுறையொன்று பின்பற்றப்படாமை. |
| (இ) | சான்றிதழ்களை வழங்குதல் | சான்றிதழ்களை அச்சிட்டு, பொறுப்பாக வைத்திருந்து வழங்குவதற்காக போதியளவு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப்படாமை. |